இதனைப்பற்றி என்ன? ....

# சுவிசேஷம்

எமது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்திலே உங்களுக்கு வாழ்த்துக்கள். இந்தத் துண்டுப்பிரதியானது சுவிசேஷம் எமக்கு எவ்வளவாக அவசியமானது என்பதைக் காட்டும்படியாகவும், ஏன் அது அப்படியான ஒரு நற்செய்தி, அதனை நாம் எப்படியாகப் பெறுகிறோம், அதற்கு எப்படியாகப் பதிலீடு கொடுக்கிறோம் என்பவைகளை உங்களுக்குக் காட்டும்படியாகத் தயாரிக்கப்பட்டதாகும்.

## எமக்கு ஏன் சுவிசேஷம் அவசியம்?

சுவிசேஷம் இல்லாவிட்டால் எமது நிலைமை எவ்வளவு மோசமானது என்பதை நாம் உணர்ந்தாலேயன்றி, சுவிசேஷத்தின் செய்தி எவ்வளவு நல்லது என்பதை நாம் உண்மையிலே புரிந்துகொள்ள முடியாது. நாம் எளிய இரங்கத்தக்க நிலைமையில் உள்ள பாவிகள். நாம் நாளாந்தம் பாவம் செய்கிறோம். தேவனுடைய கோபாக்கினைக்கும் தண்டனைக்குமேயன்றி வேறு எதற்கும் நாம் உரித்தாளர்களல்ல.

இயேசுக்கிறிஸ்து இல்லாமல் எமது சூழ்நிலையானது ஓட்டுமொத்தமாக நம்பிக்கையிழந்த நிலைமையே. பாவத்திலும் மீறுதலிலும் மடிந்தவர்களாகவே மனுக்குலத்தை வேத ஆகமங்கள் விபரிக்கிறது. தேவனுடைய இரக்கமும் இயேசுக் கிறிஸ்துவின் இரத்தத்தினூடான சுத்தமாக்குதலும் இல்லாமல், எமக்கு நாளாந்தம் நரகத்திலே நித்திய தண்டையே காத்திருக்கிறது. எனவே எமக்கு சுவிசேஷம் தேவை – ஆற்றொணாத்தீவிரமாகத் தேவை!

## சுவிசேஷம் என்பது என்ன?

சுவிசேஷத்தின் ஆங்கிலப்பதம் "கொஸ்பல்" என்பது கிரேக்க வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டது, அதன் அர்த்தம், "நற்செய்தியின் பிரகடனம்" என்பதாகும். சுவிசேஷம் என்பது ஆதாமும் ஏவாளும் பாவத்திலே வீழ்ந்தபோது, பரிசுத்த திரித்துவ தேவன் மனுக்குலைத்தைக் கைவிட்டுவிடக்கூடாதெனத் தீர்மானித்தமை பற்றிய நற்செய்தியாகும். பாவமும் மரணமும் கடைசிவார்த்தையாக இராது என்பதை அங்கேதானே தேவன் தீர்மானித்தார். அவர் ஒரு இரட்சகரை அனுப்புவதாக வாக்களித்தார்.

காலம் கனிந்தபோது, தேவன் தனது மைந்தனை கன்னி மரியிடம் பிறக்கும்படி அனுப்பினார். எமது கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து எமக்காக பரிபூரண வாழ்வை வாழ்ந்தார். சிலுவையிலே, முழு உலகுக்குமான தண்டனையையும் தண்டத்தையும் அவர் தன்மீது ஏற்றுக்கொண்டு, பாவத்துக்கான பூரண பலியாகத் தம்மையே பலியிட்டார். இயேசு மரணத்தினின்று வெற்றிகரமாக உயிர்த்தெழுந்து பண்டைய விரோதிகள்மீது வெற்றி சிறந்தார்: பாவம், மரணம், மன்றும் பிசாசு.

எனவே ஒவ்வொரு கிறிஸ்தவனும் மிகுந்த களிப்புடனும் மனோதிடனுடனும் உலகத்தின்முன்பாகப் பிரகடனம் செய்வது: "எனது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து தொலைந்த பயனற்ற நபராகி என்னை மீட்டிருக்கிறார், சகல பாவங்களினின்றும் மரணந்தினின்றும் பிசாசின் வல்லமையினின்றும் என்னைக் கிரயத்துக்குக் கொண்டு என்னை வென்றார்; தங்கத்தாலும் வெள்ளியாலும் அல்ல, மாறாக அவரது பரிசுத்த பெறுமதிமிக்க இரத்தத்தாலும் கள்ளங்கபடற்ற அவரது பாடுகள் மரணந்தாலும்."

என்னே ஒரு மகிமையான செய்தி! ஒரே, மெய்யான நித்திய சர்வவல்ல தேவன் எமது உலகுக்குள் எமக்காக வாழ்ந்து, மரித்து மீண்டும் உயிர்த்தெழ வந்தார். பரிசுத்தமற்ற அநீதரான நாம் எமது அனைத்துப்பாவங்களில் இருந்தும் மன்னிப்பைப் பெற்று அதன்மூலம் எமது இரட்சகராம் கிறிஸ்துவின் பரிபூரண பரிசுத்தத்தையும் நீதியையும் பெற்றுக்கொள்கிறோம் – இலவச கொடையாக – அவர் எம்மை நேசிப்பதால் மாத்திரமே. அது நற்செய்தி! அதுதான் சுவிசேஷம்.

## இந்தப் பெரும் இரட்சிப்பை இன்று எமது வாழ்வினுள் எப்படியாகப் பெறுகிறோம்?

முழு உலகுக்குமாக கிறிஸ்து வென்ற மன்னிப்பை நாம் தனிப்பட எப்படியாகப் பெற்றுக்கொள்கிறோம்? சுமார் 2,000 வருடங்களுக்கு முன்பதாக சிலுவையிலே இடம்பெற்ற நிகழ்வு எப்படியாக இன்று எமது வாழ்வுக்குள் வடிந்தோடிவரும்?

இங்குங்கூட மிக நல்ல செய்தி உள்ளது. தேவன், தனது சுவிசேஷத்தினூடாக, ஒன்றுக்கும் மேற்பட்டதான வழிமுறைகளிலே எமக்கு மன்னிப்பையும் பாவத்துக்கு எதிராக உதவியையும் வழங்குகிறார். தேவன் அவரது கிருபையிலே ஒப்பற்ற செழிப்பானவர். அவர் தனது சுவிசேஷத்தைத் தனது வார்த்தையூடாக, ஞானஸ்நானத்தினூடாக, பலிபீடத்துத் திருவருட்சாதனமூடாக, மற்றும் பாவ அறிக்கையும் பாவமன்னிப்புமூடாக வழங்குகிறார். தேவன் எமது வாழ்வுக்குள், உலகத்துக்காக கிறிஸ்து வென்ற பெரிதான இரட்சிப்பைத் தனிப்பட எமக்குப் பிரயோகிப்பதற்காக நுழையும் வழிமுறைகள் இவைகளே.

பரிசுத்த ஆவி சுவிசேஷத்தின் வார்த்தையூடாக எமது இதயங்களிலே கிறிஸ்துவே உலகின் இரட்சகர், ஆதலால் எமது இரட்சகரும் அவரே எனும் விசுவாசத்தை உருவாக்கி அதனைத் தக்கவைக்கும்படியாகச் செயற்படுகிறார். வேதாகமம் எமது கற்கைக்கும் பக்திவிருத்திக்குமென எழுதப்பெற்ற தேவனுடைய வார்த்தை. வேத ஆகமங்கள் இயேசுக்கிறிஸ்துவையும், அவர் எமக்காக அனைத்தையும் பற்றியதான நற்செய்தியால் நிறைந்துள்ளன. சர்வல்லமையுள்ள, ஆவியால் நிறைந்த வார்த்தையூடாகத் தேவன் எம்மைத் தனது சபைக்குள் கூட்டிச் சேர்க்கிறார்; சபைதான் தேவனுடைய வார்த்தையூடாக ஒவ்வொரு கிறிஸ்தவனையும் சுமந்து பிறப்பிக்கும் மெய்யான தாய். பரிசுத்த ஆவியானவர் வார்த்தையானது பிரகடனம் செய்யப்பட்டு, செவிமடுக்கப்பட்டு தியானிக்கப்படும்போது விளைதிறனுடனும் வினைத்திறனுடனும் அந்த வார்த்தையூடாகப் பிரசன்னமாகியிருக்கிறார்.

பரிசுத்த ஞானஸ்நானமாகிய திருவருட்சாதனமானது தேவனுடைய கட்டளையிலும் மற்றும் அவரது வார்த்தையிலும் உள்ளடங்கப்பெற்ற தண்ணீர்; அல்லது பரிசுத்த வேதாகமத்திலே புனித பவுல் கூறுவதுபோல, "திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்தல்." ஞானஸ்நானத்தினூடாக, நாம் கிறிஸ்துவின் மரணத்துக்கும் உயிர்த்தெழுதலுக்கும் பங்காளிகளாகிறோம். ஆதலால் ஞானஸ்நானம் பாவத்தில் இருந்து மன்னிப்பைச் செயற்படுத்தி, மரணத்தினின்றும் பிசாசினின்றும் எம்மை விடுவித்து, விசுவாசிக்கும் அனைவருக்கும் நித்திய வாழ்வை வழங்குகிறது. ஞானஸ்நானமானது வார்த்தையுடனும் தேவனுடைய வாக்குத்தத்தத்துடனும் இணைந்துள்ளதால், அது மெய்யாவே ஜீவன் அருளும் தண்ணீராகும், கிருபையில் செழித்தது – பரிசுத்த ஆவியிலே புதிய பிறப்பின் கழுவுதலாகும்.

பாவ அறிக்கையூடாகவும் மன்னிப்பினூடாகவும் சுவிசேஷத்துக்கு விசேஷமானதோர் பிரயோகத்தைக் கிறிஸ்து வழங்கியுள்ளார். பாவ அறிக்கை என்பது எமது பாவங்களை தேவனிடம் ஏற்றுக்கொண்டு அவரது மன்னிப்பை எமது போதகரிடமிருந்து, தேவனிடமிருந்து பெறுவதுபோலவே, சந்தேகப்படாமல், அதன்மூலம் பரலோகத்திலே தேவனுக்கு முன்பாக எமது பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்பதை உறுதியாக நம்பிப் பெறுவதாகும். கிறிஸ்துதாமே தனது சபைக்கு மன்னிப்பை பொறுப்பாக ஒப்புவித்து, ஒருவர் ஒருவரின் பாவங்களை மன்னிக்கும்படியாக எமக்குக் கட்டளையும் இட்டுள்ளார்.

கர்த்தரின் பந்தியானது கிறிஸ்தவர்களாகிய நாம் புசித்து அருந்தும்படியாக கிறிஸ்துவினாலேயே ஸ்தாபிக்கப்பட்டதாக, அப்பத்தின்கீழும் இரசத்தின்கீழும் எமது கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் மெய்யான சரீரமும் இரத்தமுமாகும். கர்த்தரின் பந்தியிலே கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமும் எமது விசுவாசத்தையும் வாழ்வையும் அவருக்குள் தக்கவைக்கும்படியாக எமது திரவியமாயும் கொடையாகவும் வழங்கபடுகிறது. நீங்கள் சுமை சுமந்து

பலவீனமாக உணர்வீர்களேயாயின், களிபபுடன் திருவருட் சாதனத்துக்குச் சென்று புத்தூக்கத்தையும், ஆறுதலையும் பெலத்தையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

தேவனால் மன்னிக்கப்படும்படி விரும்புகிறவர்களும் தமது வாழ்விலே அவரது பிரசன்னத்தைக் களிகூரும்படி விரும்புகிறவர்களும் வார்த்தைக்கும் திருவருட்சாதனங்களுக்கும் பசித்துத் தாகமாய் இருப்பார்கள். சங்கீதக்காரனுடன் சேர்ந்து நாமும் கூறுவது, "என் ஆத்துமா தேவன்மேல், ஜீவனுள்ள தேவன்மேலேயே தாகமாய் இருக்கிறது; நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்பேன்?" தேவன் தன்னைப் பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகளை வழங்கியுள்ளார். எனவே கிறிஸ்தவர்கள் தேவனுடைய வார்த்தைக்காக, பாவமன்னிப்புக்காக, திருவருட்சாதனங்களுக்காக எல்லாம் பசித்துத் தாகம் கொள்கின்றனர். தேவன் எம்மைச் சந்திக்கிறார், தனது கிருபையின் வழிமுறைகளால் நமக்குத் தேவையானவைகள் வழங்குகிறார் என்பதையிட்ட நிச்சயம் நமக்கு உண்டு. சிலுவையிலே வெற்றிசிறந்த கிறிஸ்துவின் மன்னிப்பானது எமக்குத் தேவனால் அவரது வார்த்தையூடாகவும் திருவருட் சாதனங்களூடாகவும் தனிப்பட்ட ரீதியிலே பிரயோகிக்கப்படுகிறது. பாவத்தின் மன்னிப்பு எங்கே உள்ளதோ அங்கே ஜீவனும் இரட்சிப்பும் இருக்கும் என்பதை அறிவது எமக்கு என்னே களிப்பாக உள்ளது.

எனவே எமது சொந்த காரணியவாதத்தாலோ அல்லது வல்லமையினாலோ இயேசுக்கிறிஸ்துவை எமது ஆண்டவராக நம்புவதோ அல்லது அவரண்டை சேர்வதோ இயலாது என்பதையும், ஆனால் பரிசுத்த ஆவியானவர் சுவிசேஷத்தால் எம்மை அழைக்கிறார், தனது கொடைகளால் எம்மை ஒளிர்விக்கிறார், மெய்யான விசவாசத்திலே எம்மைத் திருநிலைப்படுத்தி வைத்திருக்கிறார் என்பதையும் நாம் நம்புகிறோம். அதேபோலவே, பூமியில் உள்ள முழுக் கிறிஸ்தவ சபையையும் அவர் அழைத்து, ஒன்றுசேர்த்து, திருநிலைப்படுத்தி, ஒரே விசுவாசத்திலே கிறிஸ்துவிலே அவர் வைத்துப்பராமரிக்கிறார். இந்தக் கிறிஸ்தவ சபையிலே அவர் அனுதினமும் செழிப்பாக எமது அனைத்துப் பாவங்களையும், அனைத்து விசுவாசிகளுடைய பாவங்களையும் மன்னிக்கிறார்.

## சுவிசேஷத்துக்குப் பதிலீடு கொடுக்கும்படி தேவன் செய்வதென்ன?

நாம் தேவனை நேசிக்கிறோம் ஏனெனில் அவர் முதலிலே எம்மை நேசித்தார். எமது கர்த்தர் நாம் சித்தங்கொள்ளவும் அவருக்குப் பிரியமானதைச் செய்யவுமென எம்மிலே செயற்படுகிறார். கிறிஸ்தவர்கள் தேவனுக்குப் பிரியமானது என்ன என்பதை அறிவதற்குப் பத்துக்கற்பனைகளைப் பார்த்து, கிறிஸ்துவிலே அவர்களுடையதாகியுள்ள பெரிதான இரட்சிப்புக்கான நன்றியறிதலாக அவரைச் சேவிக்க விரும்புகிறார்கள்.

தேவனுடைய வார்த்தையில் இருந்து தேவன் தன்னை எந்த ஒரு நபருக்கும் அல்லது பொருளுக்கும் மேலாக, முதலாவதாக வைக்கும்படிக்கும், அவரது பெயரைத் துஷ்பிரயோகிக்காமல் அதனைக் கனம்பண்ணும்படிக்கும், அவரது வார்த்தையைச் செவிமடுத்து அதற்குக் கீழ்ப்படியும்படிக்கும் விரும்புகிறார் என்பதைக் கற்றுக்கொள்கிறோம். பிள்ளைகள் தமது பெற்றோரையும் அதிகாரத்தில் உள்ள பிறரையும் கனம்பண்ணிக் கீழ்ப்படியவேண்டும். நாம் பிறரின் நலனைக் கவனத்திற் கொண்டு, எமது அயலாருக்குத் தீங்கு விளைவிக்கும் அல்லது காயப்படுத்தும் எதனையும் செய்யக்கூடாது. பாலியல் ரீதியிலே நாம் தூய்மையானதும் பண்பானதுமான வாழ்வுகளை, மனைவிகளும் கணவன்மாரும் ஒருவரையொருவர் நேசித்து கனம்பண்ணி வாழவேண்டும். எமது அயலாரின் நலனை நாடுவதிலும் அவனது வியாபாரத்தையும் சொத்தையும் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் உதவுவதிலே நாம் எமது அயலவர்களைப்பற்றிப் பொய் பேசாதிருக்கும்படி கவனம் கொள்ளவேண்டும். மாறாக ஒவ்வொரு தேவையிலும் அவனுக்கு உதவி வழங்கி, ஆதரவு நல்கி மற்றும் பாதுகாக்கவும் வேண்டுவதுடன் இறுதியாக நாம் எமக்கு உரியதல்லாதவற்றை விரும்பாமல், எமக்கு வழங்கப்பட்டவைகளுடன் திருப்திப்படவேண்டும்.

தேவனையும் பிறரையும் சேவிக்கும்படிக்கு எப்படியான களிப்புமிக்கதோர் சலாக்கியம் நமக்கு உள்ளது! எமது வார்த்தைகள் மற்றும் செயல்கள் ஆகிய இரண்டினூடாகவும் எமது விசுவாசத்துக்கான சாட்சிபகரும் வாய்ப்பை அவர் வழங்குகிறார்.

## சுவிசேஷமானது எப்படி மங்கும்?

நற்செயல்கள் செய்யும் வாழ்வை ஊக்குவிக்கும் நல்நோக்கம் கொண்ட மக்களால் சுவிசேஷமானது மங்கலாக்கப்படுவதுடன், தமது கிரியைகளாலேயே தாம் இரட்சிக்கப்படுவதாகக் கிறிஸ்தவர்களைச் சிந்திக்கச்செய்வதற்கு இட்டுச்செல்லும். இது பெரும் ஆபத்தானதாகும். அவரது வார்தையினூடாகவும் திருவருட்சாதனங்களூடாகவும் எமது பாவங்களை மன்னிக்கும்படிக்கும் தேவனுடனான எமது உறவினை வலுவூட்டும்படிக்கும் இயேசு தொடர்ச்சியாக எமது வாழ்விலே செயற்பட்டுவருகிறார். இது நாம் செய்யக்கூடிய காரியம் அல்ல. எமது இரட்சிப்புக்கான பாராட்டைத் தேவனே எப்போதும் பெறுகிறார். எம்மிலே செயலாற்றுபவர் அவரே. எமது நல்ல செயல்கள் எமது இதயங்களிலும் வாழ்வுகளிலும் தேவனுடைய அன்பின் விளைவாகும். இந்த வாழ்விலே நாம் செய்யும் நல்ல செயல்கள் எம்மை இரட்சிக்காது, கிறிஸ்து மாத்திரமே எம்மை இரட்சிப்பவர். எமது கிரியைகள் எமது அயலவரைச் சேவித்து, எமது வாழ்வுகளிலே தேவனுடைய இரக்கங்களுக்காக நாம் நன்றியறிதல் உள்ளவர்களாக இருக்கிறோம் என்பதை உலகத்துக்குக் காண்பிக்கும்.

சுவிசேஷத்துக்கான உணர்வூபூர்வமான பதிலீடு அத்துமீறிய வலியுறுத்தப்படுவது சுவிசேஷம் மங்கச்செய்யப்படும் வேறொரு வழிமுறையாகும். சில கிறிஸ்தவர்கள் தமக்கு ஒருவித பரவசமானதும் ஆவிக்குரியதுமான அனுபவம் இராவிட்டாலோ அல்லது ஒருவித "ஆன்மீக வீறாப்பை" அவர்கள் உணராவிட்டாலோ அவர்கள் மெய்யாகவே கிறிஸ்தவர்கள் அல்ல என நம்பிக்கை கொள்வதுண்டு. தாம் தேவனுடைய பிள்ளைகள் என்பதையிட்ட உறுதிப்பாட்டுக்கு, தமது நம்பிக்கையையும் திடவுறுதியையும் கிறிஸ்து அவர்களுக்காகச் செய்தவைகளிலும் அவர்களிடம் வருவதற்குத் தேவன் பயன்படுத்தும் வழிமுறைகளிலும் – அவரது வார்த்தையிலும் திருவட்சாதனங்களிலும் – வைப்பதற்குப் பதிலாகச் சில மக்கள் தமது சொந்த இருதயத்துக்குள்ளேயே பார்ப்பது மெய்யாகவே துக்ககரமானதுதான்.

"நான் செய்வது போதுமானதுதானா?" என்று கேட்க ஆரம்பிப்பவர்களாகவோ அல்லது "நான் என்னதான் செய்தாலுமென்ன, அது பொருட்டல்ல, ஏனெனில் தேவன் எப்படியாவது என்னை மன்னிப்பார்" என்று சிந்திப்பவர்களாகவோ நாம் எம்மைக் கண்டுகொள்ளக்கூடுமாயின், நாம் கிறிஸ்துவையும் அவரது மன்னிப்பையும் இழக்கும் இடராபத்திலே இருக்கிறோம். நாம் எப்போதுமே இயேசுவைப் பார்த்து எமது நம்பிக்கையையும் திடவுறுதியையும் அவரிலேயே வைக்கிறோம். அவரே எமது இரட்சகர். அதுதான் நற்செய்தி!

சகல ஆசீர்வாதமும், கனமும், நன்றியும், துதியும் பிதாவுக்கும் மைந்தனுக்கும் தமது கிருபையினால் எம்மை இரட்சிக்கும் தேவனுக்கே. சகல மகிமையும் அவருக்கே தகும்! மேலே பரலோகத்தில் உள்ள திரியேக தேவனே, உமது இரட்சிக்கும் அன்பைக் காட்டியிருக்கிறீர். உமது ஆசீர்வாதமான பெயரையே நாம் போற்றுகிறோம்.

கலாநிதி A.L. பர்றி (Barry)
தலைவர்,
லூத்தரன் சபை – மிசூரி திருப்பேரவை